## மர்பி கோப்பை

# 16 அணிகள் பங்கேற்கும் கல்லூரிகள் கால்பந்து போட்டி

## சென்னையில் இன்று தொடக்கம்

சென்னை, பிப்.23— லயோலா கல்லூரி சார்பில் ஆண்டுதோறும் மர்பி கோப்பைக்கான கல்லூரிகள் கால்பந்து போட்டி சென்னையில் நடைபெற்று வருகிறது.

கொரோனா பாதிப்பு காரணமாக 2 வருடமாக போட்டி நடத்தப்படவில்லை.

### கல்லூரி கால்பந்து

இந்த ஆண்டுக்கான 22—வது மர்பி கோப்பைக்கான கல்லூரிகள் இடையேயான கால்பந்து போட்டி நுங்கம் பாக்கத்தில் உள்ள லயோலா கல்லூரியில் இன்று தொடங்கு கிறது. மார்ச் 3—ந்தேதி வரை இந்தப் போட்டி நடக்கிறது.

இதில் லயோலா மற்றும் செயிண்ட் ஜோசப், பிஷப் ஹெபர் (திருச்சி), கிறிஸ்ட் கல்லூரி, எம்.சி.சி. (சென்னை) போன்ற முன்னணி அணிகள் உள்பட 16 கல்லூரிகள் பங்கேற்கின்றன.

நாக்அவுட் மாறும் லீக் முறையில் போட்டி நடை பெறுகிறது. 4 அணிகள் 'லீக்' சுற்றுக்கு முன்னேறும். அவை ஒவ்வொன்றும் மோதும். இதில் முதல் இடத்தை பிடிக்கும் அணி சாம்பியன் பட்டம் பெறும்.

### பரிசு தொகை

முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகளுக்கு பரிசு தொகை வழங்கப்படும். சாம்பியன் அணிக்கு ரூ.10 ஆயிரமும், 2—வது இடத்துக்கு ரூ.7 ஆயிரமும் கிடைக்கும். 3—வது, 4—வது இடங்களுக்கு முறையே ரூ.5 ஆயிரம், ரூ.3 ஆயிரம் வழங்கப்படும். இது தவிர சிறந்த வீரர்களுக்கு பரிசு வழங்கப்படும்.

தொடக்க நாளான இன்று நடைபெறும் ஆட்டங்களில் குருநானக்— அசன் நினைவு கலை மற்றும் அறிவியல்

# நுங்கம்பாக்கத்தில் கால்பந்து மல்லுக்கட்டும் 16 கல்லூரிகள்

சென்னை, பிப். 24–

லயோலா கல்லூரி சார்பில், கல்லூரியின் மறைந்த முன்னாள் முதல்வரான எல்.டி.மர்பி நினைவுக் கோப்பைக்கான கால்பந்து போட்டி, நுங்கம்பாக்கத்தில் உள்ள கல்லூரி மைதானத்தில் நேற்று துவங்கியது.

தொடர்ந்து, 22ம் ஆண்டாக நடக்கும் இப்போட்டியில், முன்னணி அணிகளான சென்னை லயோலா, எம்.சி.சி., மற்றும் திருச்சி செயின்ட் ஜோசப், நடப்பு சாம்பியன் வேல்ஸ் பல்கலை உட்பட மொத்தம் 16 அணிகள் பங்கேற்றுள்ளன. போட்டிகள் அனைத்தும், 'நாக் அவுட்' மற்றும் 'லீக்' முறையில் நடக்கின்றன.

போட்டிகளில் முதலிடத்தை பிடிக்கும் அணிக்கு, 10 ஆயிரம், அடுத்தடுத்த இடங்களை பிடிக்கும் அணிகளுக்கு, 7,000, 5,000, 3,000 ரூபாய் என வழங்கப்படவுள்ளது.



■ கால்பந்து முதல் போட்டியில், மோதிய குருநானக் – ஆசான் கல்லூரி அணிகள். இடம்: நுங்கம்பாக்கம்.

முன்னணி அணிகள், காலிறுதிக்கு நேரடியாக தகுதி பெற்றுள்ளன. அரையிறுதியில் தகுதி பெறும் அணிகள் 'லீக்' முறையில் விளையாடுகின்றன.

நேற்று மதியம் நடந்த முதல் போட்டியில், குருநானக் மற்றும் ஆசான் மெமோரியல் கல்லூரி அணிகள் மோதின. போட்டி துவக்கத்தில் இருந்து, குருநானக் அணி ஆதிக்கம் செலுத்தியது.

முடிவில், எதிரணியை ஒரு கோல் கூட அடிக்க விடாமல் விரட்டி, 8 – 0 என்ற அபார கோல் கணக்கில், குருநானக் முதல் வெற்றியை பதிவு செய்தது. வரும் 3ம் தேதி வரை போட்டிகள் நடக்கின்றன.

# கால்பந்து சாம்பியன் அணி




சென்னையில் நடந்த பாதிரியார் எல்.டி. மர்பி கோப்பைக்கான கல்லூரி அணிகள் கால்பந்து இறுதிப்போட்டியில் டைபிரேக்கரில் பிரசிடென்சி கல்லூரியை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்ற லயோலா அணியினரை படத்தில் காணலாம்.

தங்க

உலகக்
ஸ்னூ
தின்
நடந்
நடந்
பெ
இற
வீர
என்
வீர
வே